## சுருக்கம்

பணியமைப்பு - நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நகராட்சிகளின் முக்கியமான கணக்கு வழக்கு சம்பந்தமான அலுவல்களை கணிப்பொறி மூலம் செயல்படுத்த கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது - பணியாளர்களுக்கான கல்வித்தகுதி மற்றும் நியமன முறை - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1)துறை

அரசு ஆணை (நிலை)எண்.202

நாள்:30.10.1998

படிக்கப்பட்டது:

30.10.1998 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு ஆணை (நிலை)எண்.201

.......

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசு ஆணையில் நகராட்சி நிர்வாகத்தில் கணிப்பொறிமயமாக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை-5, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சிகளில் கீழ்க்காணும் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது:-

| பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அலுவலகங்களின் பெயர் | பணியிடங்களின் பெயர் | | | |
|---|---|---|---|---|
| | பதிவிறை குறிப்பாளர் (Data Entry Operator)(ரூ.3200-85-4900 சம்பள விகிதம்) | உதவி திட்ட அமைப்பாளர் (Assistant Programmer) (ரூ.5500-175-9000 சம்பள விகிதம்) | திட்ட அமைப்பாளர் (Programmer) (ரூ.6500-200-11100 சம்பள விகிதம்) | திட்ட ஆராய்வாளர் (System Analyst) (ரூ.8000-275-13500) |
| நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை-5 | 2 | 1 | - | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| மைய நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகங்கள் - 7 | 7 | - | 7 | — |
| நகராட்சிகள் - 102 | 50 | 102 | - | - |

2. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான கல்வித்தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் பின்வருமாறு-

## 2. திட்ட ஆராய்ச்சியாளர் (System Analyst):

**அ. கல்வித்தகுதி:**

(i) கம்ப்யூட்டர் அறிவியலில் மேல்நிலை பட்டப்படிப்பு அல்லது எம்.சி.ஏ.

அல்லது

கம்ப்யூட்டர் அறிவியலில் பொறியியல் பட்டப்படிப்பு.

(ii) தமிழறிவு அவசியம்

**ஆ. முன் அனுபவம்:**

புரோகிராமிங் மற்றும் கம்ப்யூட்டர் சிஸ்டம் மேனேஜ்மெண்டில் குறைந்தபட்சம் மூன்று வருட அனுபவம்.

## 2. திட்ட அமைப்பாளர் (Programmer):

**அ. கல்வித்தகுதி:**

(i) கம்ப்யூட்டர் அறிவியலில் மேல்நிலை பட்டப்படிப்பு

அல்லது

எம்.சி.ஏ. அல்லது கம்ப்யூட்டர் அறிவியலில் பொறியியல் பட்டப்படிப்பு.

(ii) தமிழறிவு அவசியம்.

**ஆ. முன் அனுபவம்:**

கம்ப்யூட்டர் புரோகிராமிங்கில் குறைந்த பட்சம் ஒரு வருடம்.

**3. உதவிக் கிட்ட அமைப்பாளர் (Assistant Programmer):**

**அ. கல்வித்தகுதி:**

(i) புள்ளியியல் பாடத்தில் அறிவியலில் பட்டப்படிப்பு அல்லது பொருளாதாரம் அல்லது வணிக இயல் இவற்றில் ஏதாவதொன்றில் ஒரு ஏற்புப்பெற்ற பல்கலைக்கழகத்தில் கம்ப்யூட்டர் அப்ளிகேசன் மேல்நிலை பட்டதாரி பட்டயம் (Post Graduate Diploma).

(ii) தமிழறிவு அவசியம்.

**4. புள்ளிவிவரக் குறிப்பாளர் (Data Entry Operator):**

**அ. கல்வித்தகுதி:**

பிளஸ் 2. மட்டத்தக (மேல்நிலை), தமிழ் மற்றும் ஆங்கிலம் மற்றும் என்.ஐ.ஐ.டி.(NIIT) ஆப்டெக் (Aptech) ஃபர்ஸ்ட் (FIRST) கம்ப்யூட்டர் போன்ற பிரபல கணிப்பொறி மையத்தின் சான்றிதழ்.

3. உள்ளாட்சி நிறுவனங்களில் கணிப்பொறி சம்பந்தமான பணியிடங்களை நியமனம் செய்வதற்கு மாநில அளவில் பின்வரும் குழுவினை நியமித்து அரசு ஆணையிடுகிறது:-

(1) நகராட்சி நிர்வாக ஆணையர்.

(2) தலைமை நிர்வாக அலுவலர், தமிழ்நாடு நகராட்சி உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம்.

(3) அரசாங்க தரவு மையத்தின் (Data Centre) சார்பாளர்.

(4) திரு.சி.ஆர்.முத்துக்கிருஷ்ணன், துணை இயக்குநர், இந்திய தொழில் நுட்பக் கழகம், சென்னை-36.

(5) திரு.வி.சங்கரநாராயணன், இயக்குநர், இராமானுஜம் கணியியல் மையம், அண்ணா பல்கலைக்கழகம்.

4. இப்பணியிடங்கள் நிரப்புவதற்கு இவ்வாணையில் ஒப்பளிக்கப்பட்டுள்ள அனைத்து பணியிடங்களையும் ஓர் அலகில் கொணர்ந்து இனச்சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்காக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் / நிர்வாக வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அல்லது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரிடமிருந்து மொத்தமாக ஆட்கள் கோரப்படுவார்கள். மேற்குறிப்பிட்டபடி குழுவினரால் நேர்முகத் தேர்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபரை ஒவ்வொரு உள்ளாட்சிக்கும் அனுப்பி வைக்கப்படும். நகராட்சி ஆணையர் அவர்களை நியமனம் செய்வார் என்றும் ஆணையிடப்படுகிறது.

5. இப்பணியிடங்கள் சம்பந்தமாக உரிய தற்காலிக விதிகள் நிர்ணயம் செய்யும் பொருட்டு தகுந்த சொற்குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.மாலதி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.

நகல்:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (பொது)துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.